பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

21 02 2025 **FRIDAY** 7 15 **PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. 98வது மராத்தி இலக்கிய மாநாட்டை பிரதமர் திரு. நரேந்திரமோடி இன்று புதுதில்லியில் தொடங்கி வைத்தார்.

2. உலகளாவிய சவால்களை எதிர்கொள்ளும் வகையில், ஜி.20 நாடுகள் கூட்டமைப்பை வலுப்படுத்த வேண்டும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.

3. முதலீட்டுக்கான வாய்ப்புகளை தொழிலதிபர்கள் ஆக்கபூர்வமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று மத்திய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. வங்காள விரிகுடா மண்டல நாடுகள் அமைப்பின் தலைமைப் பொறுப்பை இந்தியா இன்று ஏற்றுக் கொண்டது.

5. சிட்னியில் நடைபெற்று வரும் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் சவ்ரவ் கோஷல் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

<<<<<<>>>>>>

98வது மராத்தி இலக்கிய மாநாட்டை பிரதமர் திரு. நரேந்திரமோடி இன்று தொடங்கி வைத்தார்.

புதுதில்லி விஞ்ஞான் பவனில் இன்று தொடங்கி 3 நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டில், பல்வேறு தலைப்புகளில் விவாதங்கள், புத்தக கண்காட்சி, கலந்துரையாடல் உள்ளிட்ட முக்கிய நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

நாட்டின் வளமான கலாச்சார பாரம்பரியத்தை எடுத்துரைக்கும் விதமாக இம்மாநாடு நடைபெறுகிறது.

நாட்டின் கலாச்சார பாரம்பரியத்தை பாதுகாப்பதில் மாராத்தி இலக்கியத்தின் பங்கு குறித்தும் இம்மாநாட்டில் விரிவாக விவாதிக்கப்படவுள்ளது.

<<<<<<>>>>>>

உலகளாவிய சவால்களை எதிர்கொள்ளும் வகையில், ஜி.20 நாடுகள் கூட்டமைப்பை வலுப்படுத்த வேண்டும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.

தென்னாப்பிரிக்காவின் ஜோஹன்னஸ்பர்க் நகரில் நடைபெற்று வரும் ஜி.20 வெளியுறவுத்துறை அமைச்சர்கள் மாநாட்டில் உரையாற்றிய அவர், உணவு, எரிசக்தி, சுகாதாரம், மின்னணு, பொது கட்டமைப்பு, மகளிர் தலைமையிலான வளர்ச்சி ஆகியவற்றுக்கு ஜி.20 நாடுகள் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

சர்வதேச அளவிலான பேரிடரை எதிர்கொள்வதற்கு ஆக்கபூர்வமான பங்களிப்பை இந்தியா வழங்கும் என்றும் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்தார்.

முன்னதாக, திரு. ஜெய்சங்கர், சீன வெளியுறவுஅமைச்சர் திரு.**Wang Yi-**யை சந்தித்து பேசினார்.

இரு தலைவர்களும் இருதரப்பு உறவுகளில் ஏற்பட்டு வரும் முன்னேற்றம் குறித்து விவாதித்தனர்.

இந்தோ – சீன எல்லைப் பகுதியில் அமைதியையும், நல்லிணக்கத்தையும் பராமரிப்பதற்கு மேற்கொள்ளப்பட்டு வரும் முயற்சிகள் குறித்தும் அவர்கள் ஆலோசித்தனர்.

கைலாஷ் – மானசரோவர் யாத்திரை இருநாடுகளுக்கும் இடையேயான நேரடி விமானப் போக்குவரத்து உள்ளிட்ட விஷயங்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

ஜி.20 மட்டுமன்றி, ஷாங்காய் ஒத்துழைப்பு கூட்டமைப்பு, பிரிக்ஸ் நாடுகள் கூட்டமைப்பு ஆகியவற்றில் இரு நாடுகளும் சிறப்பான பங்களிப்பை வழங்கி வருவதாக திரு. ஜெய்சங்கர் தெரிவித்தார்.

இருதரப்பிற்கும் பொதுவான மண்டல மற்றும் உலகளாவிய விஷயங்கள் குறித்தும், சீன வெளியுறவுத்துறை அமைச்சருடன் திரு. ஜெய்சங்கர் விவாதித்தார்..

**<<<<<<>>>>>>**

ஜம்மு காஷ்மீரின் பூஞ்ச் மாவட்ட எல்லைப் பகுதியில் இந்திய – பாகிஸ்தான் ராணுவ தலைவர்களுக்கு இடையேயான கொடி அணிவகுப்பு சந்திப்பு இன்று நடைபெற்றது.

எல்லைக் கோட்டுப் பகுதியில் அமைந்துள்ள **Chakan Da Bagh** பகுதியில் நடைபெற்ற இந்த பேச்சுக்களின் போது இருநாடுகளைச் சேர்ந்த ராணுவ உயரதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

எல்லைக் கோட்டுப் பகுதியில் அமைந்துள்ள ஜம்மு, பூஞ்ச், ரஜோரி மாவட்டங்களில் **IED** குண்டுகள் வெடித்த சம்பவம், ஊளவு பார்த்தல் மற்றும் அவ்வப்போது நிகழ்ந்த அத்துமீறிய துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் குறித்தும் பாகிஸ்தானி அதிகாரிகளுடன் இந்திய ராணுவ அதிகாரிகள் விவாதித்தனர்.

எல்லைப்பகுதியில் பதற்றத்தை தணிப்பதற்கான வழிமுறைகள் குறித்து இருதரப்பிலும் ஆலோசிக்கப்பட்டது இந்த சந்திப்பு சுமார் ஒரு மணி நேரம் நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**<<<<<<>>>>>>**

முதலீட்டுக்கான வாய்ப்புகளை தொழிலதிபர்கள் ஆக்கபூர்வமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று மத்திய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கேட்டுக் கொண்டுள்ளார்.

கேரள மாநிலம், கொச்சியில் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் உரையாற்றிய அவர், உலக தரத்திற்கேற்ப திறன்மிக்க பணியாளர்கள் உருவாக்க வேண்டியதன் அவசியம் குறித்து வலியுறுத்தினார்.

இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி தற்போது 4 டிரில்லியன் அமெரிக்க டாலராக உள்ளது என்று குறிப்பிட்ட அவர், பொருளாதார வளர்ச்சி மற்றும் இதர பொருளாதார நடவடிக்கைகள் மூலம் இது அடுத்த சில ஆண்டுகளில் கணிசமாக அதிகரிக்கும் என்றும் தெரிவித்தார்.

அதிக முதலீடுகளை ஈர்ப்பதற்கு நாட்டின் கூட்டாட்சி தத்துவம் உதவிகரமாக இருப்பதாகவும் திரு. பியூஷ் கோயல் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய கேரள முதலமைச்சர் திரு. பினராயி விஜயன், முதலீட்டுக்கான வாய்ப்புகளை சிறந்த முறையில் பயன்படுத்தி, கேரள மாநிலத்தை உலக முதலீட்டுக்கான மையமாக உயர்த்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

பிரிட்டனுடன் தொலைத்தொடர்பு, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் மற்றும் வளர்ந்து வரும் புதிய தொழில்நுட்பம் குறித்து இணைந்து செயல்படுவதற்கான நடவடிக்கைகளை இந்தியா மேற்கொண்டுள்ளது.

இதுதொடர்பாக தொலைத் தொடர்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் பிரிட்டன் நாட்டின் தேசிய அறிவியல் ஆலோசகர் திரு. கிரிஷ் ஜான்சனை சந்தித்த தொலைத்தொடர்பு செயலாளர் டாக்டர் நீரஜ் மிட்டல், ஒத்துழைப்புக்கான வாய்ப்புகள் குறித்து அண்மையில் ஆலோசனை நடத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொலைத்தொடர்பு மற்றும் மின்னணு கட்டமைப்பை இருநாடுகளும் பகிர்ந்து கொள்வது குறித்தும் அடுத்த தலைமுறைக்கான தொலைத்தொடர்பு கட்டமைப்பை உருவாக்குவது குறித்தும் இருதரப்பிலும் விவாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

5-ஜி, 6-ஜி தொழில்நுட்பம், மின்னணு கட்டமைப்பு பாதுகாப்பு ஆகியவை குறித்தும் பிரிட்டனுடன் இந்தியா ஆலோசனை நடத்தியதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

வங்காள விரிகுடா மண்டல நாடுகள் அமைப்பின் தலைமைப் பொறுப்பை இந்தியா இன்று முறைப்படி ஏற்றுக் கொண்டது.

மாலத்தீவில் நடைபெற்ற இந்த அமைப்பின் 13வது கூட்டத்தில் பங்களாதேஷிடமிருந்த தலைமைப் பொறுப்பு இன்று இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் மத்திய மீன்வளத்துறை செயலர் டாக்டர் **Abhilaksh Likhi** தலைமையிலான இந்திய தூதுக்குழுவினரிடம் தலைமைப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய டாக்டர் **Likhi,** இந்த கூட்டமைப்பை புதிய உச்சத்திற்கு கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகளை இந்தியா மேற்கொள்ளும் என்று தெரிவித்தார்.

மண்டல அளவிலான ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் இந்தியா மேற்கொள்ளும் என்றும் அவர் கூறினார்.

வளர்ந்து வரும் நாடுகளின் முன்னேற்றத்திற்கு இந்தியா உறுதுணையாக இருக்கும் என்றும் டாக்டர். **Abhilaksh Likhi** தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

உத்தரபிரதேசத்தின் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளா நாட்டின் ஆன்மிகம், நம்பிக்கை மற்றும் கலாச்சாரத்தின் சங்கமம் என்று தூர்தர்ஷனின் தலைமை இயக்குநர் திருமதி. **Kanchan Prasad** கூறியுள்ளார்.

மகாகும்பமேளாவை ஒட்டி நிறுவப்பட்டுள்ள கும்பவாணி சிறப்பு வானொலி நிலையத்தை பார்வையிட்ட பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கும்பவாணி ஒலிபரப்பு மக்களின் உள்ளங்களில் ஆன்மிக சிந்தனையை நிரப்பியுள்ளதாக தெரிவித்தார். இந்த ஒலிபரப்பின் வாயிலாக தொடர்ந்து, ஆன்மிக தகவல்கள் வழங்கப்படும் என்றும் அவர் கூறினார். கங்கை, யமுனை, சரஸ்வதி நதிகள் இணையும் திருவேணி சங்கமத்தில் புனித நீராடும் மக்களுக்கு ஆன்மிக அமைதியும், புத்தெழுச்சியும் கிடைப்பதாக திருமதி. **Kanchan Prasad** தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

சிட்னியில் நடைபெற்று வரும் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் சவ்ரவ் கோஷல் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார். ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதியாட்டத்தில் அவர் 11-6, 11-6, 11-5 என்ற செட்கணக்கில் தென்கொரியாவின் **Minwoo Lee-**யை வென்றார்.

<<<<<<>>>>>>

ஆசிய கோப்பை வில்வித்தை போட்டியில் இந்தியா, ஆடவர் குழுப் பிரிவில் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது. பாங்காக்கில் நடைபெற்று வரும் இப்போட்டியின் கலப்புக் குழுப் பிரிவிலும் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

<<<<<<>>>>>>

சிங்கப்பூரில் நடைபெற்று வரும் சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Unnathi Hooda** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார். மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர் 21-19. 21-15 என்ற செட்கணக்கில் ஆஸ்திரேலியாவின் **Saena Kawakami–**யை வென்றார்.

<<<<<<>>>>>>

துருக்கியில் நடைபெற்ற சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியா வெள்ளிப்பதக்கம் வென்றது.

கலப்பு இரட்டையர் பிரிவில் **Akash Pal - Poymantee Baisya** இணை இப்பதக்கத்தை கைப்பற்றியது.

**<<<<<<>>>>>>**

மொனாக்கோ சர்வதேச மகளிர் செஸ் போட்டியின் மூன்றாவது சுற்று முடிவில் இந்தியாவின் **Koneru Humpy** முதலிடத்தில் உள்ளார்.

**<<<<<<>>>>>>**

ஆசிய கோப்பை கூடைப்பந்து தகுதிச் சுற்றுப் போட்டியில் இந்தியா இன்று ஈரானை எதிர்கொள்கிறது.

டெஹ்ரானில் நடைபெறவுள்ள இப்போட்டி இன்னும் சற்றுநேரத்தில் தொடங்கவுள்ளது.

**<<<<<<>>>>>>**

புனே சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன் - விஜய் சுந்தர் பிரசாந்த் இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை 7-6, 6-4 என்ற செட்கணக்கில் இந்தியாவின் **Niki Kaliyanda Poonacha –** ஜிம்பாப்வேயின் **Courtney John Lock** இணையை வென்றது.

**<<<<<<>>>>>>**

அர்ஜென்டினா மற்றும் பெருவில் நடைபெறவுள்ள உலக கோப்பை துப்பாக்கிச் சுடும் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

**Saurabh Chaudhary, Manu Bhaker** உட்பட 35 பேர் இதில் இடம்பெற்றுள்ளனர்.

**<<<<<<END>>>>>>**